# பாதுகாவலன்

PATHUKAVALAN

✲ மலர்: 118 இதழ் : 18 21—08—1992 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு. விலை ரூபா 3-50 ✲


உள்ளே...


| உள்ளே... | பக்கம் |
| --- | --- |
| ☆ வேதாகமப் போட்டி... | 3 |
| ★ புரியாத புதிர்களா? ... | 2 |
| ★ ...... புனிதராகலாம் | 2 |


**உரிமையும்- கடமையும்**

நாம் முன்னேற்ற பாதையில் செல்ல, பத்திரிகையைப் பற்றிய உங்கள் ஆக்க பூர்வமான கருத்துக்களையும், விமர்சனங்களையும் தெரிவிப்பது வாசகர்களின் உரிமையும் கடமையுமாகும்.

● திருத்தந்தை கூறுகின்றார்:

## ஆயுதங்களைப் பறிமுதல் செய்வது

# போர் தொடுக்க அல்ல போர் தடுக்க

**பொஸ்னியா - கர்சகோவினாவில் இடம் பெறும் மோதல்களைத் தலையிட்டு நிறுத்த ஐ. நா. சபைக்கும் ஐரோப்பிய சமுதாயத்திற்கும் கடமையுள்ளது என்று சொன்னார் திருத்தந்தையின் செயலர் கர்தினால் அஞ்சலோ சொடானோ. பொஸ்னியாவில் சேபிய துருப்புக்கள் வதை செய்யும் முகாம்களை உருவாக்கி, அப்பாவி மக்களை சித்திர வதைப் படுத்தி வருகிறார்கள் என்ற செய்தி உண்மையென உறுதி செய்யப்பட்டுள்ளது என்றார் கர்தினால். இது குறித்து மேலும் விசாரணை நடத்தப்படுவது மட்டுமல்ல, அப்பாவி மக்களின் உயிரிழப்புகள் உடனடியாகத் தடுக்கப்பட வேண்டுமென அழைத்தார்.**

கொடும் செயல்களைப் புரிந்து வரும் துருப்புகளிடமிருந்து ஆயுதங்களைப் பறிமுதல் செய்வது, சர்வதேச சமுதாயத்தின் கடமை என்பது திருத்தந்தையின் மேற்கோள் என்று கூறினார் கர்தினால். இத்தகைய தலையீடு போரை ஆதரிப்பதாக அல்ல, மாறாக போரைத் தடுப்பதாக நோக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டார் சொடானோ.

அப்பாவி மக்களைக் கொல்வோரைத் தடுக்காமல் மௌனம் காப்பது கொலைச் செயலுக்கு உடந்தையாய் இருப்பதைக் குறிப்பிடுமென்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஏற்கனவே பல முறை திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் பொஸ்னியாவில் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டுமென அறிக்கை விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உரிமைக்காக குரல் கொடுப்பவர் மரணத்தோடு போராடுகின்றனர்

மனித உரிமைகளுக்காகப் போராடுகிறவர்கள் உலகின் பல பகுதிகளில் கைது செய்யப்பட்டும் கொலை செய்யப்பட்டும் வருவதுமாக பாரீஸைத் தலைமைப் பீடமாகக் கொண்ட சர்வதேச மனித உரிமைக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. மனித உரிமை மதிக்கப்படாமை, கொலை செய்யப்படல், காணாமல் போதல், சட்டவிரோதமாகக் கைது செய்யப்படல், மனித உரிமை நிறுவனங்கள் தடை செய்யப்படல், அரசு அங்கீகார மறுப்பு, நிறுவனங்கள் கலைக்கப்படுதல் போன்றன தொடர்வதாக இக் கூட்டமைப்பு ஐ. நா. அவையில் எடுத்தியம்பியது.

சில நாடுகளில் மனித உரிமைக்காக போராடுவோர் மரணத்தோடு போராடுபவர்களுக்கு ஒப்பானவர்கள் என ஐ. நா. அவையில் உரையாற்றிய மனித உரிமைக் குழுவைச் சார்ந்த டேவிற் கொஸ்லர் கூறினார்.

ஐவரி கோஸ்ற், துனீசியா, எகிப்து, சீரியா, குவாற்றமாலா, பேரு ஆகிய நாடுகளை உதாரணமாகக் காட்டினார்.

## பொஸ்னியாவில் கத்தோலிக்கருக்கு எதிரான வன்முறைகள்

பொஸ்னியாவில் வாழும் குறோசிய கத்தோலிக்கர் மட்டுமல்ல, போலாந்து, யூக்கிரேன், இத்தாலி ஆகிய பகுதிகளில் இருந்து இங்கு வாழும் கத்தோலிக்கரும் வன்முறையைச் சந்திக்கிறார்கள் என்றார் கர்தினால் குவாட்றிச்.

எட்டுக் கத்தோலிக்க கோவில்கள் எரிக்கப்பட்டுள்ளதையும், 20 கத்தோலிக்க கோவில்கள் சேதமாக்கப்பட்டுள்ளதையும் கூறிய கர்தினால் இத்தகைய செயல்கள் ஒவ்வொரு நாளும் தொடர்கின்றன என்று மேலும் உரைத்தார்.

இதற்கிடையே பொஸ்னியா குடியரசுச் சண்டை தொடருமாயின் 4 லட்சம் அகதிகள் அங்கிருந்து குறோசியாவுக்கு போகும் அச்சம் இருப்பதாக குறோசிய அகதிகளுக்கான உயர் அதிகாரி கூறினார்.

## கத். ஆயரை நடுநிலையாளராகக் கொண்ட அமைதிப் பேச்சுவார்த்தை

குவாற்றமாலா அமைதிப் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ளும் அரசுப் பிரதிநிதிகளும், புரட்சியாளர்களும், மனித உரிமைப் பிரச்சனைகளுக்கு உறுதியான தீர்வு காண்பதில் ஆர்வமுடன் செயற்பட்டு வருவதாக அரச பிரதிநிதிகளின் தலைவர் உரைத்தார்.

கத்தோலிக்க ஆயர் றொடல்போ றொறொனோவை நடுநிலையாளராகக் கொண்டு மெக்சிக்கோவில் நடைபெறும் இவ் அமைதிப் பேச்சு வார்த்தைகள் கடந்த பத்து மாதங்களாக நடைபெற்று விரைவில் முடிவுக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

உள்நாட்டுப் போருக்கான முன் வைக்கப்பட்ட பதினொரு காரணங்களில், மனித உரிமை மீறல், நீதியற்ற நிலப்பங்கீடு, பூர்வீக குடிமக்கள் சுரண்டப்படல் முதலியன அடங்கும்.

## ஐக்கியமும் வாழ்வும்

ஐக்கியமும், வாழ்வும் என்ற தலைப்பில் உலகளவிலான கொண்டாட்டம் ஒன்றை வரும் வருடம் ஆகஸ்ட் மாதம் 10—14 வரை கன்னியா குமரியில் நடத்த திட்டங்கள் வரையறுக்கப்பட்டு வருகின்றன. கடந்த வருடம் கொச்சினில்

(தொடர்ச்சி 3 ஆம் பக்கம்)

## புதிய ஞானஉபதேசம்

திருத்தந்தை 2 ஆம் அருள் சின்னப்பர் யூன் 22 ஆம் திகதியன்று, பன்னிரு கர்தினால்-ஆயர் கொண்ட சர்வதேச ஆணைக்குழுவும், 7 ஆயர் அடங்கிய ஆசிரியர் குழுவும் சமர்ப்பித்த அகில உலக திருச்சபைக்கான புதிய ஞான உபதேச நூலுக்கு தன் அங்கீகாரத்தை அளித்தார்.

ஏழு வருட முயற்சியின் பயனான இந்நூல் கத்தோலிக்க விசுவாசத்தினதும், ஒழுக்க நெறியினதும் முக்கியமானதும், அடிப்படையானதுமான உண்மைகளின் தொகுப்பாகும்.

லத்தீன் மொழியில் ஆயத்தம் செய்யப்பட்ட இந்நூல் வேறு பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு 1993 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பாவனைக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

## இல்லறத் தொண்டனின் திருமணப் பொன்விழா

''கிறிஸ்துவின் அன்பிலிருந்து என்னைப் பிரிப்பவன் யார்?'' என்ற புனித சின்னப்பரின் வாழ்க்கைக் கொப்ப, பல்வேறு சூழ்நிலைகளிலும் மிகவும் பிரமாணிக்கமாய் 43 வருடங்கள் அரும் பெரும் சேவையாற்றிய முன்னை நாள் புனித பத்திரிசியார் கல்லூரிப் பிரதம லிகிதரும் புனித மரியாயின் சேனையாளருமான திரு. பெர்ணாண்டோ தம்பதிகளின் திருமண 50 வது நிறைவு தினம் ஆகஸ்ட் திங்கள் 17ஆம் திகதி புனித பத்திரிசியார் சிற்றாலயத்தில் நன்றித் திருப்பலியுடன் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

யாழ். ஆயர், பலகுருக்கள், கன்னியர், திரளான மக்கள் சமூகம் கொடுத்தார்கள். விழா நாயகர்களின் குருப்புதல்வன் அருட்திரு பெனட் நடுநாயகமாய் நின்று ஒப்புக்கொடுத்த திருப்பலியில் மறையுரையாற்றிய யாழ். குருமுதல்வர் அருட்திரு மைக்கல்சாமி அவர்

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)

வெள்ளிவிழாவில்... யாழ். ஆயர்

## தேவைக்கேற்ப பயிற்சி தளத்திலே அளிக்கப்படுகிறது

25 ஆண்டுகள் தளத் திருச்சபையில் மறை பணியாற்றிய திரு. M. யேசுதாசன், திரு. S. அந்தோனிப்பிள்ளை அவர்களின் சேவை பாராட்டு வைபவம், யாழ் மறைக்கல்வி நிலையத்தில், யாழ் ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் 8.8.92 இல் நடைபெற்றது. பாதிப்பான இக்காலக் கட்டத்தில் திருமறைப் பணிக்கு எங்கள் தேவையை உணர்ந்து, அதற்கேற்ற பயிற்சி யாழ் மறைக் கல்வி நிலையத்திலேயே அளிக்கப்படுகிறதென்று யாழ். ஆயர் கூறினார்.

இவ்வைபவத்தில் வாழ்த்துரை ஆற்றிய மறைக்கல்வி

(தொடர்ச்சி 4 ஆம் பக்கம்)

★ யாழ். பேராலய பெருவிழாவில்

## நற்செய்தியின் நட்சேத்திரம்

மரியன்னையின் விண்ணேற்ற தினமன்று, யாழ் பேராலய திருவிழா, காலையில் யாழ் குரு முதல்வர் அதி. வண எஸ். எ. மைக்கல்சாமி அ.ம.தி. அவர்களால் திருநாள் திருப்பலி நிறைவேற்றப்பட்டு, மாலையில் திருச் சொரூப சுற்றுப் பிரகாரத்துடன் வெகு

( தொடர்ச்சி 4ஆம் பக்கம் )

## கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்

# எம்கருத்து

## வழிகாட்டி உதவுங்கள்

''வேதாகமத்தை தப்பாக விளங்குபவர்களுக்கு எதிராக தகுந்த அறிவுரை கொடுப்பது கத்தோலிக்கரின் பொறுப்பு,'' என்று யாழ். ஆயர் அறை கூவலிட்டதை கடந்த இதழில் பிரசுரித்தோம். இப்பொறுப்பை ஏற்று, ஆர்வத்துடன் பணியாற்றுவது ஒவ்வொரு கிறிஸ்தவனின் சிறப்பான கடமையாகும். இப்பணியை வலியுறுத்தி திருமறைக் கொள்கைகளை மக்களுக்கு முறையாக அறிக்கையிட்டு அனைவரையும் இப்பணியில் ஈடுபடுத்துவோமாயின் பல குறைபாடுகள் நம்மைவிட்டு அகலும். இத்தகைய செயல் நம் விசுவாச வளர்ச்சிக்கு ஏற்ற சான்றாகும்.

''உலகெங்கும் போய் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள்,'' (மாற். 16:15,16) என்பதே இயேசுவின் கட்டளை. எனவே இயேசு போதித்த அதே போதனைகளையே தூய ஆவியானவரைப் பெற்ற பின்பு இயேசுவின் சீடர்கள் சிதறாமல் திரிக்காமல், கூட்டாமல் குறைக்காமல் போதித்தார்கள். அவையே அவர்நிறுவிய திருச்சபையின் போதனைகள்.

''இயேசு செய்தவை வேறு பல உண்டு. அவற்றை ஒவ்வொன்றாய் எழுதினால் எழுதவேண்டிய நூல்களை உலகமே கொள்ளாது என்று கருதுகிறேன்,'' (அரு. 21:25) என்றார் சுவிஷேச அருளப்பர். எனவே இப்போதனைகள் இரு கருவூலங்களில் காணப்படுகின்றன. ஒன்று 'விவிலியம்' என்று சொல்லப்படும் வேதாகம நூல் தொகுப்பு. 'பாரம்பரியம்' எனப்படும் வழி வழியாக வரும் போதனைத் தொகுப்பு மற்றொன்று. இப்போதனைகள் பல நூல்களில் விரவிக் கிடக்கின்றன. இந்த பாரம்பரியமும் பரிசுத்த வேதாகமும்தான் கிறிஸ்து சமயத்தின் போதனைகளின் உறைவிடம்.

இராயப்பரின் பதிலாளியாகிய திருத்தந்தையிடம் இப்போதனைகளின் உறைவிடத்தைப் பேணிப் பாதுகாத்து, இந்நற்செய்தியைப் பரப்புப்பணி சிறப்பான முறையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலர் வழிவரும் ஆயர் தம் மறைவட்டத்தில் அப்போஸ்தலத்தின் தலைமை, அதன் ஒற்றுமைக்கு நடுநாயகமாயிருந்து, இத் தூதுப்பணி முயற்சியைப் பேணி வளர்த்து, வழி நடத்தி, ஒருமுகப்படுத்தும் பொறுப்புடையவராவர், திருச்சபையின் இத் தலையான பணியில் திருச்சபை உறுப்பினர் அனைவரும் — குருக்கள், பொதுநிலையினர் - ஆயருடன் ஒன்றிணைந்து ஆர்வத்தோடு ஈடுபடுவது அவர்களின் அடிப்படைக் கடமையாகும்.

நாம் கடைப்பிடிக்கும் கிறிஸ்தவ விசுவாசத்தின் மாறாத உண்மைகளை திரிபுபடுத்தும் சக்திகளை இனங்கண்டு, உண்மைச் சத்தியங்களுக்கான விளக்கங்களைக் கொடுத்துதவ ஒவ்வொரு கிறிஸ்தவனும் அறிவாற்றலும், மனத்திடனுமுள்ளவனாயிருக்கவேண்டும்.

ஆகவே, வாசகர்கள் சரியான வழிநடத்துதலை நம்மிடம் எதிர்பார்க்கின்றனர் என்பதை மனதில் கொண்டு, இறைவாக்குரைக்கும் இனிய பணியை துணிவுடன் ஆக்கமுறையில் ஆற்றிட, அதிகாரபூர்வ விளக்கங்களை ''புரியாத புதிர்களா?'' எனும் தலைப்பில் இவ்விதழ் தொடக்கமாக வெளியிட நாம் முயல்கின்றோம்.

மேலும் ''குருகுலத்தாரும், பொது நிலையினருமான விசுவாசிகளுக்குச் சிந்திப்பதற்கும் ஆராய்வதற்கும், தாங்கள் தேர்ச்சிபெற்ற துறைகளில் தங்கள் கருத்துக்களைத் தாழ்ச்சியோடும், துணிவோடும் வெளிப்படுத்துவதற்கும் முறையான சுதந்திரம் உண்டு என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்,'' (இ. உ. தி. 62) என்ற 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் கொள்கையை எல்லாரும் மனதில் கொள்ளவேண்டும். ஆகவே திருச்சபையைப்பற்றிய நேர்மையான திறனாய்வுகளையும், திருச்சபையின் சாதாரண போதனையிலிருந்து மாறுபடும் கருத்துக்களையும் தெரிவிக்க வேண்டியது கத்தோலிக்க இதழ்களின் தலையாய கடமைகளில் ஒன்றாகும் என்பதையும் இவ்வேளையில் நினைவுறுத்த விரும்புகிறோம்.

# புரியாத புதிர்களா?

### எதிர்பாருங்கள்

திரிபுபடுத்தப்படும் மறை உண்மைகளை தெளிவுபடுத்தும் முயற்சியில் அறிவு செறிந்த கட்டுரைகள் ஒவ்வொரு இதழிலும் இங்கு இடம்பெறும்.

**அடுத்த இதழில்**
புனிதர்களின்
வணக்கத்தைப் பற்றிய
**2ஆம் வத்திக்கான்**
சங்கத்தின்
அறிவுரைகள்.

## கத்தோலிக்க திருச்சபையில் புனிதர்களின் வணக்கம்

''கிறிஸ்துவோடு ஆட்சிபுரியும் புனிதர்கள் மக்களுக்காக தம் மன்றாட்டினை இறைவனிடம் சமர்ப்பிக்கின்றார்கள். எங்கள் வேண்டுதல்களால் அவர்களை அழைப்பதும், எங்கள் ஒரே மீட்பரும் இரட்சகருமாகிய இயேசுக்கிறிஸ்து வழியாக இறைவனிடமிருந்து நன்மைகளைப் பெறுவதற்காக அவர்களின் பரிந்துரையை நாடுவதும் சிறந்ததும் பயனளிக்கக் கூடியதும்'' என திரிதெந்து பொதுச்சங்கம் கற்பிக்கின்றது. (25ஆம் அமர்வு)

நாம் புனிதர்களை நோக்கிச் செலுத்தும் செபம் இறைவனுக்கோ அன்றேல் கிறிஸ்துவுக்கோ செலுத்தும் செபத்திற்கு முற்றாக வேறுபட்டது. 'நன்மைசெய்யுமாறும், எங்களைத் தீமையிலிருந்து காப்பாற்றுமாறும் இறைவனையே வேண்டுகிறோம். புனிதர்கள் இறைஅருளை அடைந்துள்ளதினால், எங்களுக்குப் பாதுகாவலையும், தேவையானவற்றையும் இறைவனிடமிருந்து பெற்றுத்தரும்படி நாம் அவர்களை வேண்டுகிறோம்'' (றோமை ஞான உபதேசம் பிரிவு IV அத். 6)

ஆகவே, விண்ணப்பிக்கும் விதத்தில் வேறுபட்ட இரு வகையான செபத்தை நாம் கையாளுகிறோம். ஏனெனில், ''எங்கள் மேல் இரக்கமாயிரும், எங்களுக்குச் செவிசாய்த்தருளும்,'' என்று இறைவனை முறையாகக் கேட்கின்றோம். ''எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்,'' என்று புனிதர்களை மன்றாடுகிறோம்— மேலும், எங்கள் மேல் இரக்கம் கொள்ளும்' என்று பரிசுத்த கன்னிமரியாளிடமோ, அல்லது புனிதர்களிடமோ நாம் வேண்டும் பொழுது, ''அவர்கள் இறை அருளை அனுபவிப்பதினால் அவர்களின் பரிந்துரையால்'' எங்கள் பரிதாப நிலையைப் பார்த்து எங்களுக்கு உதவிபுரியுமாறு மாத்திரம் அவர்களை இறைஞ்சுகிறோம். அத்துடன் ''இறைவனுக்குரியவற்றை மற்றவர்களுக்கு உரியதாக்காமலிருக்க எல்லோரும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.'' (றோமை ஞான உபதேசம்)

ஆகவே கத்தோலிக்க படிப்பினையில் இரு முக்கிய அம்சங்கள் அடங்கியுள்ளன: ஒன்று புனிதர்களின் பரிந்துரை; மற்றது அவர்களை வேண்டுதலின் பயன்பாடு. (கத்தோலிக்க அகராதி, லண்டன், 1952, ப. 721)

## பொதுநிலையினரும் புனிதராகலாம்

புனிதர் பட்டத்திற்கான ஓட்டத்தில் பொது நிலையினர் பெரும்பாலும் பின் தங்கியவர் ஆகிவிடுகின்றனர்.

திருத்தந்தையவர்கள் விவாகமான ஒரு தம்பதியினரை புனித நிலைக்கு உயர்த்த தாம் விரும்புவதாகவும் ஆனால் அப்படிப்பட்ட அபேட்சகர் எவரும் தற்போது வத்திக்கான் கோப்புகளில் இல்லையென்றும் குறிப்பிட்டார். பொதுநிலைப் புனிதரைக் கண்டு பிடிப்பதில் கடைப்பிடிக்கப்படும்முறையும், செயலமைவுத் திட்டமும் மாற்றியமைக்கப்பட வேண்டுமா என்னும் கேள்வியை அவர் எழுப்பியது பலருக்கு வியப்பையளித்தது.

திருச்சபை புனிதரை ஏற்படுத்தும் சம்பிரதாயமான முறைகளை 1 500களின் பிற்பகுதியில் ஆரம்பித்து அன்று முதல் 190க்கு மேற்பட்ட பொது நிலையினர் புனிதர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆனால் இவர்களுள் பெரும்பாலானவர்கள் வேதசாட்சிகள் குழுக்களாக புனிதராக்கப்பட்டவர்கள். முன் மாதிரியான தனிப்பட்ட வாழ்வுக்காகவன்றி, ஆபத்து நேரத்தில் அவர்கள் காட்டிய புண்ணியங்களைக் கொண்டே சிறப்பிக்கப் படுபவர்கள். ஆக 11 பொது நிலையினரே தனிநபர்களென்ற முறையில் புனிதர் பட்டம் பெற்றுள்ளனர். இதே வேளையில் சுமார் 250 துறவிகள் — பெரும்பாலும் சபைகளை நிறுவியவர்கள் — புனிதர் பட்டம் பெற்றுள்ளனர். பொது நிலையினரில் அறுவர் பெண்கள், இருவர் செபம் செய்வதற்காக வீட்டை, குடும்பத்தைத் துறந்து சென்றவர்கள். ஒருவர் 14 வயது இளைஞர் — இவர் ஒரு துறவற சபையை ஏற்படுத்தியவர்.

இப்போது முன்னைவிட விரைவாக பொது நிலையினரின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படுகின்றன. தற்போதுள்ள சுமார் 1 600 கோப்புக்களுள் ஏறக்குறைய 100 பொது நிலையினருடையவையாகும். ஆனால் எவரும் ஊக்கமாக முயற்சி எடுக்காவிட்டால் ஒன்றும் நடக்காது என ஓர் அதிகாரி கூறினார்.

ஒரு புனிதரைத் தாம் அறிந்ததாக எண்ணுபவர்களுக்கு புனிதர்களுக்கான பேராயம் சில ஆலோசனைகளைக் கூறியுள்ளது. அவர் மரணித்து ஐந்து ஆண்டுகளின்பின் ஒரு கழகம் அல்லது சங்கத்தை அமைத்து தமது ஆயரை அணுகவேண்டும். அவரே ஆரம்ப விசாரணைகளை நடத்துவார். இக்குழு அவரது புண்ணியங்களையும் அப்பிரதேச மக்கள் அவருக்காக மன்றாடுவதையும் எடுத்துக் காட்டக் கூடியதாயிருக்க வேண்டும். அவர் பற்றிய

( தொடர்ச்சி 3ஆம் பக்கம் )

### உங்கள் சிந்தனைக்கு

1. அச்சத்தை வெளிக்காட்டுவது அபாயத்தை எதிர்கொண்டழைப்பதைப் போன்றது. ( ஃபீல்டு)
2. இலட்சியத்தின் மேல் சிறிதளவு நம்பிக்கையாவது இல்லையானால், வாழ்க்கை இருண்டும், சுவையற்றும் போய்விடும். ( ரஸ்ஸல் )
3. என் உடலுறுப்புக்களை நீங்கள் சிதைத்தாலும் நான் உயிர்வாழ்வேன். ஆனால் என்னுடன் வேரூன்றியுள்ள கடவுள் நம்பிக்கையை நீங்கள் சிதைத்து விட்டால் என்னால் உயிர் வாழ இயலாது. ( மகாத்மா காந்தி )
4. மகிழ்ச்சியுள்ள இதயத்தைக் கொண்டவன் தொடர்ந்து விருந்தைச் சுவைக்கிறான். ( ஜான் கென்னடி )
5. புண்படுதனாலேயே இதயங்கள் பண்பட்டு வாழ்கின்றன. ( வில்லி )

**அருளும் உண்மையும் யேசுக்கிறிஸ்து வழியாக வந்தன. (அரு. 1:17)**

## பொதுநிலை...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

விண்ணப்பம் மேலிடத்துக்குப் போவதாயிருந்தால் அதற்கு வேண்டிய செலவுகளுக்காக நிதி சேகரிக்கத் தொடங்குவதும் நன்று. மறைமாவட்ட அதிகாரிகள் பரிசீலனை செய்வதற்காக அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதுவதுடன் பிற ஆவணங்களையும் சேகரித்தல் வேண்டும். அவரால் எழுதப்பட்டு அச்சேறியவை, அச்சேறாதவை, நாட்குறிப்புகள், பேட்டிகள் இவற்றுள் அடங்கும். ஆனால் இவ்வெழுத்துக்களைப் பற்றி இருகருத்துக்கள் உண்டு. பரிசீலனைக்கு கண்கூடாகத் தெரியக் கூடிய பொருள்களாதலால் ஒருவரது வாய்ப்புகளை இவை அதிகரிக்கும் எனச்சிலர் கருதுகின்றனர். ஆனால் ''எவ்வளவு குறைவாக எழுதியிருக்கிறார்களோ அவ்வளவுக்கு நல்லது. ஏனெனில் ஏதாவது தவறாக எழுதப்பட்டும் இருக்கலாம்'' என பேராயத்தின் வழக்கு விபரக் கூற்றாளரான பிதா எஸ்ஸர் கூறுகின்றார். உதாரணமாக புனித சின்னப்பர் போன்றோருக்கு இன்றைய விதிகள் மிகக் கஷ்டமாக இருக்கும் என்று அவர் கூறுகின்றார்.

அந்த நபரை நன்கு அறிந்துள்ளோர் வேண்டும் போது சாட்சியமளிக்கக் கூடியவர்கள் இருப்பதும் துணைபுரியும். அவரைப் பிறர் பரிசுத்தமானவராகக் கருதினார்களா என்பதையும் ஆயர் அறிய முற்படுவார். மறைமாவட்ட அதிகாரிகள் அது தகுந்தது எனக்கருதினால் ஆயர் அவ்விண்ணப்பத்தை ரோமாபுரிக்கு அனுப்பிவைப்பார். அங்கு கோப்பு பரிசீலனை செய்யப்பட்டு, செயற்படும் கோப்பு என வழக்கமாகப் பதிவு செய்யப்படும். இது ஓர் ஆரம்பந்தான். வழக்கமாக இன்னும் பல ஆவணங்களைக் கேட்டு அவற்றைப் பரிசீலித்த பின்பு தான் ''அவர் மிக மேம்பட்ட புண்ணியங்களைக் கொண்டிருந்தார்'' எனப் பேராயம் அறிவிக்கும். அவர் பேரால் ஒரு புதுமை நிகழ்ந்த பின்னரே அவருக்கு முத்திப்பேறு பெற்ற பட்டம் அளிக்கப்படும். புனிதர் பட்டம் பெறுவதற்கு மற்றொரு புதுமை தேவைப்படுகிறது. புதுமைகள் நிகழவேண்டுமென்றால் மக்கள் அவரிடம் செபிக்க வேண்டும். அதற்கு அவர் நன்கு அறியப்பட்டிருக்க வேண்டும்.

## வேதாகமக் குறுக்கெழுத்துப் போட்டி எண் 1

— அதற்கான வினாக்கள்
- இடமிருந்து வலம். — 21-08-92 காவலனிலும்,
- மேலிருந்து கீழ் — 04-09-92 காவலனிலும், வெளிவரும்.

— அதற்கான கூடு (வினாக்களைத் தவிர்த்து) — 18-09-92 காவலனில் வெளிவரும்,

— விடைகளை அனுப்ப வேண்டிய இறுதி நாள் 31-09-92

### தேடுங்கள் கண்டடைவீர்கள்

**குறுக்கெழுத்துப் போட்டி எண் 1**

வினாக்கள் : இடமிருந்து வலம் (விடைகளின் எழுத்துக்களின் எண்ணிக்கை அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன.)

1. ஏழைகளுக்கு விருந்து செய்பவனுக்கு, நீதிமான்கள் உயிர்த்தெழும்போது இது கிடைக்கும். (4)
3. மரியன்னை தாம் பெற்ற இறையருளைக் குறித்து இவ்வாறு பெருமிதம் கொண்டாள். (5)
7. ''ஆபிரகாமின் மகளாகிய'' இவள் இவ்விதம் ஊனமுற்றிருந்தாள். (2)
11. சின்னப்பருக்கு இப்படி ஒரு பெயர் இருந்தது, (3)
14. தலைமை அப்போஸ்தலரின் ஆசையைப் பாருங்கள். இவற்றை மட்டுமல்லாமல் தம்முடைய கைகளையும், தலையையும் கூட கழுவ வேண்டுமாம், ஆண்டவர்! (5)
16. இதனால் உண்டான தழும்பைப் பார்த்து அதில் விரலை விட விரும்பினார் இந்து தேச அப்போஸ்தலர். (2)
17. இங்கே யேசு உலாவிக் கொண்டிருந்தார். (7)
18. மத்தேயுவின் மறுபெயர் எது? (2)
20. நம் கண்ணுக்கு வியப்புத்தரும் கல் இது. (5)
21. யேசு ஒரு மலையிலிருந்த போது இது வெண்மையாய் ஒளி வீசியது. (2)
22. விசாரணையின் போது பிலாத்து யேசுவைப் பார்த்து இது என்ன என்று கேட்டான். (3)
23. இது சூசையப்பரின் தகப்பனார் பெயர். (4)
24. யோவாக்கிமின் ஆட்சிக் காலத்தில் யூதாவின் மேல் போர்தொடுத்த பபிலோன் அரசன். (8)

### முதல் ஆண்டு நினைவஞ்சலி



திரு. பி. ஜே. இம்மானுவல்

தோற்றம்:- 12-04-1931
மறைவு:- 22-08-1991

இரக்கமுள்ள எம் தந்தையே உமது விசுவாசத்தில் வாழ்ந்து மரித்த உமது அடியான் திரு. பி. யே. இம்மானுவல் அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும்.

இவரின் ஆன்ம சாந்திக்காக யாழ். மரியன்னை பேராலயத்தில் ஆவணி மாதம் 21ஆம் திகதி காலை 6-15 மணிக்கும் 24ஆம் திகதி காலை 5-45 மணிக்கும் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படும்.

பிரிவின் நினைவில்
மனைவி, மகன், மகள்

5/14 அச்சக ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

A/32

### 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
பெனான்டோ சுவாம்பிள்ளை
(நவம்)
(மிருசுவில்)

தோற்றம்: 08-06-1946
மறைவு: 27-07-1989

விளக்கேற்றி வைத்தீரே விளக்கணைந்து நாளாச்சே வீட்டில் உள்ளோர் கதறியழ விண்ணுலகம் போனீரே.

இவரின் ஆன்ம சாந்திக்காக 27-07-1992 அன்று யாழ்ப்பாணம் அடைக்கலமாதா ஆலயத்திலும், மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்திலும், முகமாலை ஆரோக்கிய மாதா ஆலயத்திலும் பூசைப்பலியில் பங்குபற்றி செபித்த அனைவருக்கும், இல்லத்தில் நடைபெற்ற உபசரணைகளில் பங்குபற்றியவர்களுக்கும் எமது உளம் நிறைந்த நன்றி.

எஸ். ஸ்ரீசண்முகேஸ்வரி
மிருசுவில்.

A/30

## ஐக்கியமும்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற உலக மத கருத்தரங்கில் சிபார்சு செய்த வரும் வருட கூட்டத்தில், உலகின் பல நாடுகளிலிருந்து 400 பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## காவலன் கண்மணிகள்

| ஒளி : 6<br>சுடர்: 14 | **எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு** |
|---|---|

### என்னகம் :

அன்புக்கினிய கண்மணிகாள்!

அன்பு மிகு யேசுவின் ஆசிகள் என்றும் உங்களோடு இருப்பதாக.

**'' தன் தீய நாட்டத்தைப்பற்றிப் பாவியானவன்
பெருமை கொள்கிறான்: பேராசைக்காரன்
ஆண்டவரைப் பழிக்கிறான், புறக்கணிக்கிறான்''** சங்.9;23

தன்னைத்தானே பெருமையாக எண்ணாத உள்ளம்; புகழாத வாய், இவற்றைப் பெற்றவர்களே தன்னடக்கம் உடையவர்களாவார் இப்பணிதனை தம்மில்வளர்த்துக்கொள்ள இன்று பலர் தவறிவிடுகின்றனர்.

தொட்டதும் சீறிவிழும் மூர்க்கத்தனம் எப் உள்ளத்தையும் உடலினையும் பாதிக்கிறது. மனச்சிக்கல், உடல் நோய் உருவாகக் கோபம், அகங்காரம் அடிப்படைக் காரணிகள் என அறிஞர்கள் அறிவுறுத்திய வண்ணம் இருக்கிறார்கள்,

கற்றது கையளவு என்பதை மறந்து தலைக்கனம் மிகுந்து, மற்றவரை மிதிக்கும் போக்கால் போட்டி பொறாமை வீட்டையும், நாட்டையும் போர்க்களமாக்கி விடுகிறது.

தன்னடக்கம் என்ற பண்பு எம்மில் வேர் ஊன்றி வளர வேண்டும்.

**''அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆர் இருள் உய்த்து விடும்.''** (குறள் 121)

அடக்கம் என்னும் அரும் பெரும் பண்பை நீவிர் பெற்று வாழ இறை யேசுவிடம் நிதம் வேண்டும்.

**உங்கள் அன்பின்
அன்பு விழி**

□ □ □

### நல்வழி நம்வழி

★ பொறாமை கொள்ளாது பொறுமை கொள்வோம்.
★ பேராசை விடுத்து உள்ளதைக் கொண்டு உறுதியாக வாழ்வோம்.
☆ கோபத்தை வென்று பாவத்தைக் களைவோம்.
★ நாவையடக்கி நல் வார்த்தை உதிர்ப்போம்.

□ □ □ □

### அங்கத்துவம்

293, ஆன் புளோறோ யோசேப்பு, ஆண்டு 10
யாழ்/இளவாலை கன்னியர் மடம் ம. வி.

### கௌரவ அங்கத்துவம்

A 46 சி. லியோ யோசேப், தலவாக்கலை.

### சிந்தனைக்கு மருந்தும் விருந்தும்

விஞ்ஞான மேதையான ஐசக் நியூட்டன் தன்னைப் பாராட்டிப் புகழ்பாடுபவர்க்கெல்லாம் கூறும் வார்த்தை:

**''கடற்கரையில் எவ்வளவு கூழாங்கற்கள் கிடக்கின்றன. அவற்றைப் போல எத்தனையோ உண்மைகள் கண்டுபிடிக்கப் படாமல் இருக்கின்றன. நான் கண்டுபிடித்த உண்மைகள் ஒரு கூழாங்கல் அளவே.''**

அறிஞர் வழியில் அடக்கத்தைக் கற்றுக் கொள்ளுங்கள்

### பேசாதே...

அதிகம் பேசினால் அமைதியை இழப்பாய்.
ஆணவப் பேச்சினால் அன்பை இழப்பாய்.
வேகமாய்ப் பேசினால் அர்த்தத்தை இழப்பாய்.
கோபமாய்ப் பேசினால் குணத்தை இழப்பாய்.
வெகுநேரம் பேசினால் வேலையை இழப்பாய்.
பொய்யைப் பேசினால் பெரியனை இழப்பாய்.
பெருமையைப் பேசினால் கிருபையை இழப்பாய்.

## இல்லறத்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் பொன்விழாக் காணும் தம்பதியரின் இல்லற வாழ்க்கை கிறிஸ்தவ குடும்பங்களுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்கியது என்றும், திரு. T.A. பெர்னாண்டோ அவர்கள் தலத்திருச்சபையினதும், சமூகத்தினதும் ஒரு சிறப்பான இல்லறத் தொண்டன் என்றும் கூறினார்.

**தம்மை ஏற்றுக்கொண்ட அனைவருக்கும் கடவுளின் மக்களாகும் உரிமை அளித்தார்.**

பாதுகாவலன்
PATHUKAVALAN

# கருவில் சிதைந்த குழந்தைகளுக்கான நினைவுச் சின்னங்கள்

சென்ற ஆகஸ்ட் 4 ஆம் திகதியன்று 'நைற்ஸ் ஒவ் கொலம்பஸ்' (Knights of Columbus) என்ற கத்தோலிக்க அமைப்பின் 110 வது வருடாந்த மகா நாட்டின் முன் நியூ யோர்க் புனித பத்திரிசியார் பேராலயத்தில் நடந்த திருப்பலியில் கர்தினால் யோண் ஓ கோணர் விடுத்த வேண்டுகோளின் பிரகாரம் அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஒவ்வொரு கல்லறைத் தோட்டத்திலும் கருவில் உயிரிழந்த குழந்தைகளுக்கான நினைவுச் சின்னமொன்றை எழுப்ப உள்ளதாக அவ்வமைப்பு அறிவித்தது.

கருவில் தோன்றி, ஆனால் உலகில் பிறக்காத குழந்தைகளின் நினைவுச் சின்னங்களை அமெரிக்க ஐக்கிய நாட்டின் அனைத்து 188 மறைமாவட்ட கல்லறைத் தோட்டங்களிலும் எழுப்ப திட்டமிட்டுள்ள இவ்வமைப்பு, இவ் நினைவுச் சின்னங்கள் ஒவ்வொரு வருடமும் தாயின் கருவறையையே கல்லறையாகக் கொண்ட 15 லட்சம் குழந்தைகளை நினைவுபடுத்துவதாக இருக்கும் என்றது.

## ரஷ்யாவில் கத்தோலிக்க — கிறிஸ்தவ சபையினரிடையிலான பேச்சுவார்த்தைகள்

முன்னாள் சோவியத்யூனியனின் ஒத்தடொக்ஸ் கிறிஸ்தவ சபைக்கும் கத்தோலிக்க சபைக்குமிடையில் வேறுபட்ட கருத்துக்களும் முரண்பாடுகளும் இருப்பினும், பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடப்பதாக மூன்று நாள் பயணம் மேற்கொண்ட போலாந்து கருதினால் கிளெம்ப் கூறினார்.

இத்தகைய கிறிஸ்தவ சபையினரிடையிலான பேச்சுவார்த்தைகள் பொதுச் செப உணர்வுடன் ஊக்கமளிக்கப்பட்டு உயிரோட்டம் தரப்பட வேண்டுமெனத் தன் ஆவலைத் தெரிவித்தார்.

ரஷ்ய தலைநகரில் திறந்த வெளியில் திருப்பலி விசுவாசிகளுக்கு நிறைவேற்றிய கர்தினால் ரஷ்ய ஒத்தடொக்ஸ் கிறிஸ்தவ சபையின் பிதாப்பிதா 2ஆம் அலெக்சியையும் சந்தித்து உரையாடினார். இரு கிறிஸ்தவ சபைகளுக்குமிடையிலான உறவுகள் மற்றும் ஒத்தடொக்ஸ் கிறிஸ்தவ சபைக்கும் முரண்பாடுகள் தோற்றுவதையிட்டு கர்தினாலும், பிதாப்பிதாவும் மிகவும் கவலை தெரிவித்ததாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ரஷ்யாவின் கிறிஸ்தவ ஐக்கிய குழுவையும் சந்தித்து கர்தினால் கிளெம்ப் உரையாடினார்.

## கத்தோலிக்க ஆசிரியர் சங்க செயற்குழு தெரிவு

கடந்த யூலை 26 ஆம் திகதி ஞாயிறன்று யாழ். மறைக்கல்வி நிலையத்தில் யாழ் மறைவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்க ஆண்டுப் பொதுக் கூட்டமும் புதிய செயற்குழுத் தெரிவும் இடம் பெற்றன. சங்கத் தலைவர் எ. எஸ். அகஸ்ரின் தலைமை தாங்க, சிறப்பு விருந்தினராகப் பேராசிரியர் கலாநிதி எ. ஜே. வி. சந்திரகாந்தன் அடிகளாரும் கலந்து கொண்டார்.

புதிய செயற்குழு உறுப்பினராகப் பின் வருவோர் தெரிவாகினர். தலைவராக யாழ் தெற்கு கிளையைச் சேர்ந்த திரு. பி. சூசைப்பிள்ளையும், துணைத் தலைவர்களாக திரு. இ. ம. ஜெயசீலன் (மறையாசிரியர்) யாழ் வடக்கைச் சேர்ந்த திருமதி எம். சி. இ. அன்ரனி ஆகியோரும் பிரச்சாரச் செயலாளராக மானிப்பாய் கிளையைச் சேர்ந்த திரு. அ. பதுவைநாயகம் அவர்களும் புனிதபத்திரிசியார் கிளையைச் சேர்ந்த திரு. ம. யேசுதாசன் (மறையாசிரியர்) அவர்கள் பொதுச் செயலாளராகவும் மானிப்பாய் கிளையைச் சேர்ந்த செல்வி எமில்டா யோசப்பின் செல்வம் துணைச் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

தகவல்: எம். யேசுதாசன்
பொதுச் செயலர்.

## அன்னை தெரேசாவுக்கு இன்னுமோர் விருது.

அன்னைதிரேசாவின் பணியைப் பாராட்டி நியூயோர்க்கில் நடந்த வைபவம் ஒன்றில் நைற்ஸ் ஒவ் கொலம்பஸ் (Knights of Columbus) என்ற கத்தோலிக்க அமைப்பு அவருக்கு விருதுப்பதக்கம் ஒன்று வழங்கி ஒரு லட்சம் டொலரை விருதுப்பணமாக அளித்தது. விருதைப் பெற்று உரையாற்றிய அன்னை திரேசா, ஒரு குழந்தையினுள் இருக்கும் கடவுளின் இருப்பை அழிப்பதென்பது மிகக் கொடூர செயலென கருவழித்தல் பற்றிக் குறிப்பிட்டார். இவ்வைபவத்தில் அமெரிக்க ஐக்கிய நாட்டு அதிபர் ஜோர்ஜ் புஷ் கலந்து கொண்டு உரையாற்றினார்.

## யாழ். மறைவட்ட குருக்களின் புதிய நியமனங்கள்

யாழ். ஆயர் அவர்கள் குருக்கள் பணிக்கான பின்வரும் புதிய நியமனங்களைச் செய்துள்ளார்.

| | | |
|---|---|---|
| அருட்திரு S. A. ஜோர்ஜ் | ... உதவிக்குரு | — மிருசுவில் |
| ,, J. J. மவுலிஸ் | ... ,, | — சுண்ணாகம் |
| ,, K. J. சிங்கராயர் | ... ,, | — பருத்தித்துறை |
| ,, J. Q. ஜெயறஞ்சன் | ... ,, | யாழ். பேராலயம் |

## வத்திக்கான் தூதரக புதிய செயலர்

இலங்கைக்கான வத்திக்கான் அப்போஸ்தலிக்க தூதரகத்தின் புதிய செயலாளராக நியமனம் பெற்ற அருட்தந்தை அன்ரோனியோ பிலிப்பாசி அவர்கள் யூலை மாதம் 22ஆம் திகதி இலங்கையை வந்தடைந்தார். இது காலம் வரை வத்திக்கான் தூதுவர் பேரருள்திரு பிரான்சுவா பக்கே ஆண்டகையின் செயலாளராகக் கடமைபுரிந்த அதி வந். யூட் T. ஒகொலோ அடிகள் இம்மாதத் தொடக்கத்திலிருந்து ஹயிற்றி (மத்திய அமெரிக்கா) யிலுள்ள அப்போஸ்தலிக்க தூதரகத்தில் கடமையாற்றுவார்.

## வெள்ளிவிழா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இயக்குநர் அருட் தந்தை ஆர். எச். சகாயநாயகம், ஆசியுரை வழங்கிய முன்னைநாள் இயக்குநர் அருள்திரு. யே. நிக்கிலஸ், ஆர். எம். ஜி. நேசநாயகம் அடிகளார், கத்தோலிக்க ஆசிரிய சங்கத் தலைவர் திரு. பி. சூசைப்பிள்ளை ஆகியோர் மறை ஆசிரியர்களின் ஆர்வமுள்ள அர்ப்பண வாழ்வில், இரவு பகல் பாராது, அவர்களுக்கு உறுதுணையாக, உற்சாகமூட்டி, ஒத்துழைப்பு அளித்து வரும் மனைவி மக்களின் பெரும் பங்களிப்பையும் உளமாரப் போற்றிப் பாராட்டினர்.

## வரலாற்று வீரன் 93 வயதில் மரணம்

செக்கோசிலா வாக்கியாவின் பிதாப்பிதாவான கர்தினால் தொமஸ்செக், தனது 93ஆம் வயதில் காலமானார்.

ஆயராக 1946இல் நியமனம் பெற்ற இவர், கம்யூனிஸ்ட் ஆட்சியின் கீழ் நெடுங்காலமாக சிறையில் வைக்கப்பட்டார். 1988இல் செக்கோசிலாவாக்கியாவில் கம்யூனிஸ்ட் ஆட்சி கவிழ்வதற்கு இவர் முக்கிய பங்காற்றினார்.

12-8-92 இல் நடைபெற்ற அவரின் மரணச் சடங்கில் திருத்தந்தையின் சிறப்புத்தூதுவராக வத்திக்கான் அரசின் செயலர் கர்தினால் அஞ்சலோ சொடானோ பங்குபற்றி உரையாற்றுகையில் செக்கோசிலாவாக்கியா, மற்றும் ஐரோப்பிய திருச்சபை வரலாறு கர்தினால் தொமஸ் செக்கைப்பற்றி எடுத்துரைக்காமல் முழுமையடையாது என்று கூறினார்.

**வேதாகமக் கட்டுரை, பேச்சுப் போட்டிகள்**
யாழ். மறை வட்டமட்டத்தில் 10-09-92 நடைபெறும்.
மேலதிக விபரங்களுக்கு பங்குத்தந்தையோடு தொடர்புகொள்ளவும்.

## யாழ் பேராலய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

ஆகஸ்ட் 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 9 நாட்கள் அருட்திரு போல் நட்சத்திரம் அ.ம.தி. ஆற்றிய மறையுரையுடன் ஆராதனைகள் நடைபெற்றன. திருநாளுக்கு முன்தினம், மாலை ஆராதனை மறையுரையில் கிறிஸ்துவ மக்கள் கிறிஸ்துவின் நற்செய்தியின் தூதுவர்களாகவும், வழிகாட்டும் விண்மீன்கள் போல் திகழவேண்டியதின் மகத்துவம் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டது. நற்கருணை நாதரின் பவனி முதன்முறையாக அழகாக அலங்கரிக்கப்பட்ட ஆலய வெளியரங்கில் பக்திபரவசமாக நடைபெற்றது.

வழிபாடுகளுக்குரிய சகல ஏற்பாடுகளுக்கு பேராலய பங்குத்தந்தை S. H. ஜெபநேசன் அடிகளாருக்குப் பக்கபலமாயிருந்த இளைஞர் உருவாக்க இயக்கத்தினரின் பங்களிப்பு பெரிதும் பாராட்டுக்குரியது.

செல்வம் ஓரிடத்தில் தங்காது; "செல்வோம்" என்று தான் சதா சொல்லிக்கொண்டிருக்கும். அது புறப்படுமுன்னே நிலையான காரியங்களைச் செய்தல் வேண்டும்.

பளை, வண்ணான்கேணி

**புனித கன்னிமரி இரக்கத்தின்மாதா கோவில் வருடாந்த திருவிழா**

**12-09-1992**

புரட்டாதி:

02-09-92 மாலை 4-30 மணி கொடியேற்றம்,
செபமாலை - திருப்பலி

03-09 — 10-09 செபமாலை, மறைஉரை, திருப்பலி

11-09 சனி மாலை ஆராதனை, திருப்பலி,
தேவநற்கருணைச் சுற்றுப்பிரகாரம்.

12-09 ஞாயிறு திருவிழா
காலை 7-00 மணி பாடல் திருப்பலி,
திருச்சுரூப சுற்றுப்பிரகாரம்.

யே. மைக்கல் சவிரிமுத்து அ. ம. தி.
பொறுப்பாளர்.

A/31

UNIVERSITY OF JAFFNA

Applications are invited for the following Posts :

1. Temporary Asssistant Lecturer in Christian Civilization
2. Visiting Lecturer in
   a) Old Testament Studies
   b) New Testament Studies
   c) Christian Philosophy
   d) Church History
   e) Christian Liturgy

**For details contact Registrar, University of Jaffna**

**CLOSING DATE. 1992-09-18**

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இல. QB/1001/58/81